செய்தி வெளியீடு எண். 69 நாள்: 05.02.2017

## செய்தி வெளியீடு

**திருவொற்றியூர், எர்ணாவூர் கடல் பகுதியில் படிந்துள்ள எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (5.2.2017) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

எண்ணூர் காமராஜர் துறைமுகம் அருகே கடல் பகுதியில் எம்.டி.பி.டபிள்யூ. மேப்பிள் மற்றும் டான் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு கப்பல்கள் துறைமுகத்திற்கு அருகில் 28.1.2017 அன்று எதிர்பாராத விதமாக மோதி விபத்து ஏற்பட்டதால், எண்ணெய் படலம் கடலில் பரவி, எர்ணாவூர் கடற்கரை அருகே கரை ஒதுங்கத் துவங்கியது.

இவ்வாறு கரை ஒதுங்கிய எண்ணெய் படலத்தை உடனடியாக அகற்றும் பொருட்டு மாநில அரசின் சார்பில் மாசு கட்டுப்பாட்டு வாரியம், சென்னை மாநகராட்சி, வருவாய்த் துறை, தீயணைப்புத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, மீன் வளத் துறை, கடலோர பாதுகாப்புக் குழுமம் மற்றும் மத்திய அரசின் பல்வேறு நிறுவனங்கள், இந்திய கடலோர காவல்படை, காமராஜர் துறைமுக பொறுப்புக் கழகம், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம், இந்திய கடற்படை, ஆகியவற்றைச் சார்ந்த பணியாளர்களுடன் மீனவர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள், ஆக மொத்தம் 5,700 நபர்கள் இந்தப் பணியில் கடந்த 5 நாட்களாக ஈடுபடுத்தப்பட்டு, கரையில் சேருகின்ற எண்ணெய் கழிவுகளை முழுமையாக அகற்றி வருகின்றனர்.

மெரினா மற்றும் எலியட்ஸ் கடற்கரை பகுதி முழுமையாக தூய்மைப்படுத்தப்பட்டுவிட்டது. மீதமுள்ள கடற்கரைப் பகுதிகள் இன்னும் ஓரிரண்டு நாட்களில் முழுமையாக தூய்மைப்படுத்தப்படும். எர்ணாவூர் பகுதியிலுள்ள கடலோர தடுப்புச் சுவர் பாறைகளில் படிந்துள்ள எண்ணெய் படலத்தை தூய்மைப்படுத்தும் பணி நிபுணர்கள் குழு மேற்பார்வையில் மேற்கொண்டு விரைவில் முடித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மீன் மாதிரிகளை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் உடனடியாக ஆய்வுகள் மேற்கொண்டு பொதுமக்கள் நுகர்வதற்கு தகுதியானதென சான்று அளித்துள்ளது. இத்துடன் மீனவர்களுக்கு ஏற்பட்ட வாழ்வாதார பாதிப்புகளை கள ஆய்வு செய்து

உரிய நிவாரணத்தை சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திடமிருந்து மத்திய அரசின் மூலமாக பெற்று வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மத்திய மற்றும் மாநில அரசு துறைகள் தற்போது சிறப்பாக ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கு பாராட்டுக்களைத் தெரிவித்து, போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து செயல்பட்டு, இப்பணியை விரைவில் முடிக்கும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கள ஆய்வினைத் தொடர்ந்து, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கள ஆய்வு மற்றும் ஆய்வுக்கூட்டத்தின்போது, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு கே.சி.கருப்பண்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ப.பெஞ்சமின், அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப.,, மத்திய அரசின் உயர் அதிகாரிகள், மாநில அரசுத் துறை செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**